5

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
7 - OCT 1930

# மரியாதைக்கும் இரண்டாம் மலர்.

J. M. பாலையா

எழுதி

2059
784 0954

P. K. A.

சீனிவாசகம்

வெளியிட்டது.

R34
N30.2
186827

# சுயமரியாதைக் கீதம்.

இரண்டாம் மலர்.

OFFICE OF THE REGISTRAR
7 - OCT 1930
MADRAS

சாத்தூர், எட்வர்டு பாடசாலை
மாணவர்,
J. M. பாலையா
இயற்றி

P. K. A. சீனிவாசகம்
வெளியிட்டது.

1930.

நாடார் பிரஸ் லிமிட்டெட், சிவகாசி.

விலை அணா 2

## மதிப்புரை.

இந்நிலவுலகில் பல்லாயிரம் ஆண்டுகளாக ஜாதிமதபேதமின்றி அன்யோன்யமாய் ஏகதெய்வவழிபாடுடன் சமயசமத்வ சகோதரத்வமுடன் ஒருவருக்கொருவர் அன்போடுவாழ்ந்துவந்த திராவிடமாம் தமிழ் நாட்டினுக்குள் மத்திய ஆசியாவிலிருந்து நாடோடிகளாய் அலைந்துதிரிந்த ஆரியர்கள் கொஞ்சங்கொஞ்சமாய் குடிபுகுந்து, திராவிடர்களின் ஒற்றுமையை வேர்பிறிக்க தேவர்களென்றும் தேவபாஷையென்றும் புராண இதிகாசங்களென்றும் மக்கள் மனத்தாலும் நினைக்கக்கூடாத அறுவறுப்பான ஆபாசக்கதைகளைச் சொல்லியும், பஞ்சதந்திரங்களைச் செய்தும், மக்களை ஏமாற்றி, ஜாதி மத பேதங்களைக்கற்பித்து, தாங்களே பூதேவர்களென்று மக்களை அஞ்ஞானத்தில் விடுத்து, கொள்ளையடித்துவந்ததை, உண்மை நிலையும், மனச்சாட்சியுமுடைய சில மகான்களால் ஆரியப்பார்பனர்களின் மோசமான சூழ்ச்சிகளைத்தகர்த்தெரிய சுயமரியாதை இயக்கமொன்றும் தோன்றி உண்மையான ஆர்வத்தோடு மகாநாடுகள் கூட்டி ஜாதி மத மக்கள் பேதமின்றி ஒரே சகோதரராய் சேர்த்து வருவது, சில அன்பு நிறைந்த வித்வான்கள் பாடல்களாகப் பாடிவருவது நாம் அறிந்தவிஷயமே.

அவ்வித்வான்களில் நமது J. M. பாலையாவும் ஒருவராவர் இவர் வயதில் சிறுவராயிருந்தும் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக்கோடுடையவராய் அவ்வியக்கம் முன்னேற வேண்டி தற்காலம் நிலவிவரும் நவீன இராகங்களில் வாலிபர்கள் மனதில் சுயமரியாதை ததும்பும்படி பாடியிருக்கும் அருமையான சுயமரியாதைக்கீதம் இரண்டாம் மலரை மனதார வரவேற்பதோடு சுயமரியாதையுள்ள ஒவ்வொருவரும் ஆதரிக்கும்படி வணக்கமாய் கேட்டுக் கொள்கிறேன்.

குறள்.

காய்த லுவத்தலகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையோர் கண்ணதே

குணநாடி குற்றமுநாடி யவற்றுள்
மிகைநாடி மிக்கொளல்.

**J. E. பால்வண்ணம்,**

தூத்துக்குடி.

'இனியாகிலும் கடைக்கண் பாரும்'—என்ற மெட்டு.

பல்லவி.

மரியாதை வாழ்வே சுக வாழ்வு—மக்களின் சுய
மரியாதை வாழ்வே சுக வாழ்வு.

அ. பல்லவி.

வறுமைப்படும் பஞ்சமர் துயரதை ஒழிக்க
வந்த பெரியோர்களின் மனமது களிக்க
திறமையுறு வாலிபர் ஒற்றுமை செழிக்க
திருட்டுப்பார்ப்பன மனுதர்மத்தை அழிக்க—மரி

சரணம்.

பொல்லாபார்ப்பனர் செய்யும் மோசம்—புவிமீதினில்
போடும் கூச்சலோ வெளிவேஷம்—புனைந்த சூழ்ச்சி
சொல்லாதிருக்க மக்கள் பாசம்—மிகுக்க யினி
துலைப்போம் பொல்லா ஜாதிவித்யாசம்—தனைவிடுத்து

முடுகு

நீதியான போதனையைக்கேட்டு மிக ஆனந்தங்கொண்டாட—
நற்கொள்கைகளை
போதித்த மகானின் இன்பச்சங்கமதிலே தினமும் கூட—
அக்ரமமாக
ஆதியில் ஆபாச செய்கை செய்த தெய்வங்களை விட்டோட—
எங்குந்தெரிய
ஜோதியாய் விளங்க சுயமரியாதைக்கொடி பாரில் ஆட—
கண்ட ஜனமே
நீச செய்கையான பால்யமணமதனை விட்டுப்போட—
துன்பம் விளைவிக்கும்
வேஷமான காரியங்களை விட்டு ஞானவழியைத்தேட—
அதன் பின்னரே
பாசமுடனே சமத்வமதைக்கொண்டு களிக்கும் நம்நாடே—
ஆனந்தம் பொங்க
நேசன் பாலையாவின் பாடல் பரிந்து கேட்டனைவரும் பாட—
பாடிமிகவாய்

கொள்ளுவரே குறையதுயிலா ஞானம்
அள்ளிப்பருகுவரேயின்பப் பானம்
தள்ளாது ஏழைக்கிடுவரே தானம்
பிள்ளைக்குப் போதித்தார் போலவே சொல்லும்—மரியாதை

'காலக்கொடுமையால் நாளுக்குநாளாக'—என்ற மெட்டு.

கண்ணிகள்.

1. தீண்டாமையை யொழிக்க சமத்வமதை
தீவிரமாய் கொள்வோம் நாமே
திவ்யமாம் சுயமரியாதை சங்கமே
திருப்புமாம் மனதுமே — தீண்டா

2. பார்ப்பனர் செய்படு மோசந்தனையே நீர்
பாரில் நிலை நாட்டாதீர்
பங்கம் படுத்துவீரவர் கொள்கைகளை
யார்த்துமினிகூட்டாதீர் — தீண்டா

3. மகா மூடத்தனமாம் மானிடர்களே
மதுபானம் செய்தலே
மறக்க மதுவைக் குறைப்போமினி
மனமிகக்கொண்டாட — தீண்டா

4. கதருடையணிவோம் கனவான்களே
கனமிகப் பெற தாமே
நிதமே குடியரசு பத்திரிகையை
மனமகிழக்கொள்வோமே — தீண்டா

5. சீர் படுத்துவோம் நம் தாய்நாட்டை முதலில்
சித்திபெறமிக நேரே
சிறியோன் பாலையா பாடலை நீங்களே
சிந்தித்துமே பார்ப்பீரே — தீண்டா

---

'முருகனிடம்போய் முறைசொல்வாய்'—என்ற மெட்டு.

பல்லவி.

சுயமரியாதை சங்கம் சேர் மனமே

அ. பல்லவி.

1. இதெங்கும் கொடுங்கடமையுடைய
மதந்தனையே அதம்படுத்துமே — சுய

2. பார்ப்பனியக்கொடுமையே மூண்டதாலே
வற்புறுத்திப்போக்க இதைப்புகல்வதாலே — சுய

2. இப்பிரபஞ்சத்தில் நடக்கும்
அக்ரமங்களை யொழிக்கும் — சுய

4. சித்திபெறவேண்டுவோர்க்கே நாடோறுமே
புத்தி குடியரசு பத்திரிகையாமே — சுய

சரணம்.

அன்பனும் கண்ணப்பர் இன்பமளிக்கின்றார்
மனமகிழ மாநிலம் புகழ
மதந்தனையே அழிக்க வந்த
பெரியோர் அறிந்தார்
இப்ரபஞ்சத்தில் நடக்கும் அக்ரமங்களை யொழிக்க. — சுய

தொகையறு.

வீணும் பார்ப்பனர் செய் புராண ஆபாசமாம்
வேணுமே அப்புறப் படுத்தி யொழிக்க
காணுமேயினியே ஞான வழியுமே
பூணுவீர் பாலையா பாமாலை யோற்றியே
அடைவீர் நலமே

முடுகு.

சமத்வம் நம்மகத்வமே அகத்திலே ஊன்ற கெட்ட இளமணம்
செய்யும் குணமதனை யோக்கியிப்போ — சுய

---

'தாயிடத்தில் அன்பில்லாத ஜேன்மம்வீணே'—என்ற மெட்டு.

பல்லவி.

தன்னிடத்தில் மதிப்பில்லாத ஜென்மம் வீணே

அ. பல்லவி.

1. தாய் நாட்டில் அன்பிலேயாம் தான்தோன்றிபித்தர்களாம்
தன்மதிப்பில்லாதபோது தாயன்புவீணே
இதையறியாததுமேனோ — (தன்

2. உண்மையாகவேமதத்தின் ஊழல்மிக ஆபாசம்
உள்ளபடி சொல்லவந்தாலேன்மிகக்கோபம்
நாஸ்திகரெனப் பெரும் ஓலம் — (தன்

3. சுயராஜ்யம் வேண்டுமென்றீர் சமதர்மம் வேண்டா
சுயமரியாதையின்றி ஆட்சியுமேனோ — [மென்றீர்
இது உங்கள் சூழ்ச்சியேதானே — (தன்

4. கோடிகோடியாகப்பணம் கொள்ளைபோகுதே யென்றீர்
கோவில்களில் பணத்தை வீணே கொட்டுவதேனோ
ஏழைகளை வாட்டுவதேனோ — தன்

5. போச்சு மதமு மென்றீர் சாஸ்திரமும் போச்சுதென்றீர்
பார்ப்பனர்கள் பிணமறுத்துப் பார்ப்பதுமேனோ
ஆங்கிலேயம் கற்பதுமேனோ தன்

6. ஒத்துழைக்கவேண்டு மென்று வெளிவேசம் போட்டுக்
உயர் சட்ட சபைகளில் வீற்றிருப்பதுமேனோ [கொண்டு
இது உங்கள் புரட்டுமேதானோ தன்

7. தெய்வமும் வேண்டாமென்று புலம்புகின்றேமென்றீர்
பெண்டு பிள்ளை வைப்புடைய தெய்வமுமேனோ
அதை வணங்குவதுமேனோ தன்

8. பண்டு சுயமரியாதையை புத்துயிரளித்துப்பெற்ற
பூமான் ஈ. வி. ராமசாமி புகலும் நல்வாக்யம்
புவிதனிலே மிக சிலாக்யம் தன்

9. சமதர்மம் ஓங்கவேண்டும் தன்மதிப்புப் பெருகவேண்டும்
சேயன் சுப்ரமண்யன் பதம் பாடவே பாக்யம்
சுயமரியாதைதான் யோக்யம் தன்

---

'சண்முகாகுகா'—என்ற மெட்டு.

பல்லவி.

அகமகிழ்வோம் அன்பரே
இகபரசுகம் பெற அகமகிழ்வோம்

அ. பல்லவி.

மகா மேன்மையாம் தானே தன்மதிப்புமாமே
மண்ணின்மீது நல்ல வழிகாட்டியாமே அக

சரணம்.

1. குவலயத்தீர் கேளும் குற்றம் நீக்கி வாழும்
அகற்ற ஜாதி பேதம் படுத்துவோம் அதமே
அவலம் நீங்குமிக்காலே பிரசங்கத்தாலே
சுயமரியாதை இருளற்றபாதை அக

2. குருட்டு எண்ணமே விரட்டு இக்கணமே
திரட்டுநற்குணமே புரட்டுவிழவே
நேயன் பாலையாகானம் நேர்மையான ஞானம்
சகாயன் இராமனே சேர்வோம் அப்பூமானே அக

'எம தரும்பக்தி முயற்சி' என்ற மெட்டு.

பல்லவி.

கண்டோம் சுயமரியாதை நலத்தை—இப்பாரிலேதாம்
கொண்டோம் பெரியாரின் பெலத்தையே

அ. பல்லவி.

1. திண்டாட்டமுடையநம் அன்பர் பஞ்சமரையே
துன்பம் செய்துவருவ தேனோ வீணே
சரி தானோ காணே
அனியாயம் தானே கண்

2. இப்ரபஞ்சத்தின் கண்ணே அக்ரமங்களைப்புரிந்த
பொல்லா தெய்வங்களை அகற்றுவீரே
பிறர்க்கும் சாற்றுவீரே
சங்கம் போற்றுவீரே கண்

3. பார்ப்பனரை அறவே நீக்கிசுகம் பெறவே
பாடுபட்டு வருகின் றார் பெரியார்
ஆர்ப்பரிப்புடனே வாரும் வாரும்
நன்மையை பாரும் பாரும்
உழைக்க சேரும் சேரும் கண்

4. ஜாதியை ஏற்கவேண்டாம் ஆதியைக் கொள்ளவேண்
பாலையா பாடலை படிப் பீரய்யே [டாம்
நீதியை கடைபிடித்தே இன்பம் ஊட்டுமாமே
கொடியை நாட்டுவோமே கண்

---

'சோமசுந்தரேஸ்வர் போற்றும்'—என்ற மெட்டு.

பல்லவி.

பார்ப்பனரல்லாத சொந்த பாரத பாலரே
பாரில் சுயமரியாதையை நாட்டுவீரே

அ. பல்லவி.

ஆர்ப்பரிக்க அன்புடன ழைத்து இன்பமளிக்குமோர்
சங்கம் இது ஓங்கும் எங்கும் பார்

1. கலப்புமணம்செய்து கனமடைவீர் நேரே
கலங்கும்விதவைகள் தற்கொலைபுரியாரே (ஆர்

186827

2. உரிமையே உண்டு நம் பெண்களுக்கேதாமே
அறிவைக்கொண்டு பால்யமணமும்நீக்குவோமே (ஆ
3. நமக்கடுக்காது பார்ப் பனீயம் பொல்லாதே
நாட்டினில்கொள்ளாதி வரை ஓட்டுவோமிப்போதே(ஆ
4. தீண்டாமையென்பதே யிப்பாரிலே ஓர் நோயே
தீர்ப்போம் சமத்வத்தால் பொல்லாதயிந்தநோயை (ஆ
5. குடியரசு திராவிடனின் குணம் தானே நம் ஞானம்
குதூகலிக்கவே காப் பாற்றுவோமே மானம் (ஆ

---

வருவாய் மயிலேறிய சண்முகனே என்ற மெட்டு.

பல்லவி

இனி நாம் மறவாதிருப்போம் அன்பரே — கொடும்
மமதையுடை பார்ப்பனரை தாக்கிட இனி

அநுபல்லவி

1 தனியேயிவர்செய்யும் சாஸ்திரச்சடங்கு
தானே அநியாயமே நம்மில்
மானமழிந்திட மந்திர தந்திர
மானதுபாயமே
விலைநிறை பசும்பாலை வாங்கியே கற்
சிலைமீது ஊற்றக்கண்டோம் நாம் ஏங்கியே துற்
கலகஙேயாக்கினர் கொடிதாங்கியே படிமீது
வலையேயிதில் வீழாதிருக்கவே (இனி நாம்
2 கூனர் குருடர் அங்கஈனர் திக்கற்றோர்க்குத்
தானதருமம் செய்வோமே வீணாய்
மானமழிந்து மதிகெட்டுப்போகாமல்
ஞானவழிகண்டோமே
பாலர் மணம் மதுபானந்தனையே நீர்
ஞாலம் குணப்பட நீக்கி சுகம்பெறும்
சீலனும் ஈ வே ராமசாமி சொல் கேட்டு
ஓலமிட்டு வெளிவேஷம் போடுதலைவிட (இனி நாம்

---

தண்டாயுதா உன் தஞ்சமே என்ற மெட்டு

பல்லவி

ஞானம் யாவர்க்கும் ஊட்டுமே அக
மகிழ்விக்கும் சுயமரியாதைச்சங்கமே ஞானம்

அனுபல்லவி

1 வான்மீன் போல் துலங்கி நல்வழி காட்டுமிது
கொண்டார் மனதை குதூகலிக்கச்செய்ய
தேன்மொழியால் நம்மை அழைக்கின்றதேயிதன்
தொண்டரானால் தீமை கணமேஒழிக்குமே ஞானம்

2 துன்பமில்லாமல் செய்து யின்பம் மிகவாய்பெய்து
சமத்வமதையுடை போல் நெய்து
அன்பிலா பார்ப்பனர் கையில் படாது
அகல்வோமவர் நமக் கடாதெனவே காட்டி ஞான

3 வாழ்க வாழ்க இராம சாமி வாழ்கவே
புகழ்ச்சியுடை சுய மரியாதை ஆள்கவே
வாழ்கவே சங்கம் கூடியுள்ள யாவரும்
தாழவே புரட்டு புராண ஆபாசமே ஞானம்

---

நொண்டிச்சிந்து.

1 சுயமரியாதையென்பதே தன் தன்
மரியாதையைக் காப்பாற்ற வேணுமென்பதே சுய

2 உண்மை கொள்கைகளாவன தாங்களதை
நுண்மையாகக் கவனிக்க வேண்டினேனே சுய

3 மதுபானம் பால்யமணமும் அறநீக்கி
தீதான காரியமதையொழிக்கவும் சுய

4 அடமுடை பார்ப்பனரையே சாராது
விடவேண்டும் அவரது புராணந்தனையே சுய

5 காட்டாது தீண்டாமையை படிமீது
நாட்டாது ஓட்டவேண்டும் கடிதுநாமே சுய

6 சங்கத்துத் தலைவர் ஈ வே இராமசாமி
சிங்கமாம் பெரியாரவரும் தாமே சுய

7 வெளிவரும் திராவிடன் பேப்பர் தாங்களதை
பழியாது படித்துப்பலனையடைவீர் சுய

8 கேளையா சுருக்கிச்சொன்னேன் அன்பன்
பாலையா பாவிற்கே செவியைச்சாயுமேன் சுய

---

பாலாபிஷேகம் பழனிமலையப்பன் என்ற மெட்டு.

பல்லவி

நாடுமெச்சும் சுய மரியாதை சங்கம்
நாடுவீரேயதில் கூடுவீரே

அனுபல்லவி

பீடுடை பார்ப்பனர் கொண்டாளும் சட்டங்கள்
கண்டோம் அது அவர் தந்திரமே

முடுகு

அகமிக குணம்பெற அகற்றுவீர் தீமை
இகபரசுகம்பெற சீர் அடைவீரே

பல்லவி எடுப்பு

மோசமான பழம் காரியமே சிறு
பாலகர்க்கு மண முடித்தலுமே

தொகையறு

வீணாய் மதமென பணந்தனை வீசியென்பயன் கண்டோம்

பல்லவி எடுப்பு

அங்கானத்துடனலையும் ஏழைகட்குத்
தங்கள் பணந்தந்து தவினலென்
புண்யமிருந்த செய்கைகளையேற்றுவீர்
பண்பாய் சமத்வமதைப் போற்றியே நாடு

---

கதராடையணிவோம் என்ற மெட்டு

பல்லவி

மனமுவந்த ஆனந்தமே
ஜெகமீதிலே ஜெயம் ஜெயம் மன

அனுபல்லவி

1 தினமும் சுட ரொழியே
திக்கெங்கும் வீசி பாவ
கனத்தை அடைவீர் அன்பரே
கனத்தை அடைவீர் அன்பரே நமக்கு மன

2 அடிமையினின்று மீள்வோம்
தன்னிடத்தில் மதிப்பைக்கொள்வோம்
ஞாலமே நலமே சீலமே
ஞாலமே நலமே சீலமிக்காலமே மண

3 சாதகம் சகுனம் புரட்டு
பாழும் பழமை விரட்டு
பார்ப்பன்யம் அந்யாயம் அடக்க
பார்ப்பன்யம் அந்யாயம் அடக்கக்கண்யமே மண

---

வானம் பூமி வாளியும் என்றமெட்டு

பல்லவி

தானஞ்செய் பாலியரே—திட
மூடன் வரு வீரே

அனுபல்லவி.

மோனமுடனே சுய மரியாதையிடையே
கூடவே நாடவே தேடியே கானம்பாடியே (தா

சரணம்

1 தேன்பொழியும் ராமசாமி வாய்மொழியைக்கேளுமேன்
மேன்மை பொங்க ஓங்கி எங்கும் அகமகிழ்விக்குமே
ஜாதியும் மதவுமே நீங்குமே சங்கம் சேரவே (தான

2 நற்கொள்கைகளை நாட்டுவோம் துற்செய்கையை ஓட்டுவோம்
அற்பராம் ஆரியர் சூத்திரனென்றால் ஆட்டியே
அகற்றுவோம் அகற்றுவோம் அகற்றுவோம் அப்
புறப்போடுவோம் (தானம்

3 பாலரின் கல்யாணமே போக்குவீர் இக்கணமே
பாரில் ஐயோ காண அது வீணே வெகு விந்தைதானே
கேளுமேன் கேளுமேன் கேளுமேன் தொல்லையை
நீக்குமேன் (தானம்

---

ஆலவாய் மதுராபுரி நகர் என்ற மெட்டு.

பல்லவி

ஓங்குமே சுய மரியாதைக்கொடி
பாங்குடனெங் கெங்குமே

அனுபல்லவி

நீங்குமே பெரும் பேதமைத்தனம்
பொங்குமே ஜெயவழியிலே (ஓங்

சரணம்

பால்ய வீரர்கள் சூழ்ந்து நின்றுமே
நீதிக்கீதங்கள் பாடவே
நீதிக்கீதங்கள் பாடவே
ஆதி ஆபாசம் மூடவே (ஓங்

தோகையரு

வாழ்கவே சுயமரியாதைத்தலைவரும்
தொண்டரும் மற்றும் பேருமே
நீடூழிவாழ்க மன்னனும் சௌந்ரபாண்டியனும்
மகிதலமீதிலே

பாட்டேடுப்பு

சீர்பெறும் எக்காரியமும்
சிறியோன் பாலையா வாழ்க வாழ்கவே
சிறியோன் பாலையா வாழ்க வாழ்கவே
குறையுமே பெரும் குறையும் ஓலமும் (ஓங்

---

(தசரத ராஜக்குமாரா) என்ற மெட்டு

பல்லவி.

சௌந்ர பாண்டிய வீரா ஜெயதீரா அதிகாரா
உபகாரா.

அனுபல்லவி

1. சமத்வத்தையே கொண்டார் மனமிகவே மகிழ்ந்து
சாதி வித்தியாசம் அழிந்து மே புகழ்ந்து
சமஉரிமை பெண்ணுக்கில்லாததை , இகழ்ந்து
சண்டாள பார்ப்பனரை விரட்ட ஞானம் புகட்ட
கொடி நாட்ட இன்பம் ஊட்ட (சௌ

2. தனத்தை ஏராளமாக மருமமாய் கொடுத்தார்
தன்னயம் மிகுந்த பொல்லா பேர்களை விடுத்தார்
தனது மகிமை ஓங்க எங்கும் பேர் எடுத்தார்
தரணியில் இவர் நீடு ஓங்கக் கொடி தாங்கப் புகழ் ஓங்க
தீண்டாமை பின் வாங்க (சௌ

3. பாங்காய் சட்டசபைஜஸ்டிஸ் கட்சி ஒலிக்க
பாரில் இந்தியமக்கட்கேப் பணய் தளிர்க்க
பாலேயா பா எங்கும் பரந்துமே ஜொலிக்க
பார்ப்போம் சுயமரியாதை நற்பாதை கொடுகாதை
ஒழிக்கத் தீதை (சௌ

---

'மேரே மௌலா புல்லாலோ' என்ற மெட்டு

மண்ணில் காருண்யரே ஜே எஸ்
கண்ணப்பரே
கண்ய மரியாதையில்
புண்யம் பெற்றவரே

பல்லவி

கொண்டாரே மிகச்சிறப்பு
ஏழைகள் மனம்பூரிப்பு மண்

தொகையரு.

வீரனும் சுயமரியாதையில் மிகத்
தீரனும் தன் கோத்திரத்தில்
பேர் பெற்ற பிரசங்கச்சிங்கம்
வேர் அற வீழ்த்தினரே பங்கம்

பல்லவி எடுப்பு

பாரிம் ஆபாசத்தை
நேரில் எடுத்துரைத்தார்
என்னே இவர் பெருமை
பொன்னே பெரிதருமை

அனுபல்லவி

தாசனே சங்கமதிலே
நேசனே அங்கமதிலே

தொகையரு.

நீடு வாழ்க இவ்விளம் வீரர் என்றுமே
பீடு வீழ்க நிலை நில்லாது
பாடும் பாலேயாவின் பாமிக ஓங்கவே
நாடுவோம் திராவிடன் பேப்பரே மண்

முற்றிற்று.

அச்சிலிருக்கிறது!   அச்சிலிருக்கிறது!!

# பால்யமணத்தின் கேடு.

அல்லது

## கனகாந்தாவின் பரிதாபநிலை.

எனும் ஓர் இனிய

தமிழ்நாவல்.

186827

விலை அணா 8.

The
Nadar Press
Limited,
SIVAKASI.
1930.